# புலம்பெயர் பொறுப்பில்லா ஊடகங்கள்...

தமிழ் செய்தித் தளங்கள் மற்றும் ஈழத் தமிழ் செய்தித் தளங்கள் எனத் தங்களைக் கூறிக்கொள்ளும் இணையத்தளங்களும் பத்திரிகைகளும் தமிழ் நாட்டுச் செய்தி ஊடகங்களின் தயவினிலேயே தங்களை வளர்த்துக் கொள்ளும் தன்மை காணப்படுகின்றது.

ஆறு கோடி மக்களிற்கு மேல் இருக்கும் தமிழ்நாட்டில் இருக்கும் தமிழ் பத்திரிகைகள் மற்றும் செய்தித் தளங்களை விட தமிழீழத்தில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் ஒரு சில இலட்சம் மக்களிடம் அதிகமாகவே இருக்கின்றது. ஆயினும் அவை அனைத்தும் தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் ஊடகங்களின் தயவிலும் ஒருசில தொண்டர்களால் அத்தொண்டர்கள் தாமாக விரும்பி தகவல்களை வழங்கினால் வெளியிடும் வறுமையிலேயே வாடுகின்றன.

உலகநாடுகள் பலவற்றிலும் குடியேறி அந் நாடுகளின் குடியுரிமை பெற்றுப் பல தலைமுறையாகவே அந்த நாடுகளில் வாழும் இந்திய வம்சாவளி மக்கள் செய்யும் விடயங்களைக்கூடி தன் நாட்டு மக்களிற்கு இந்திய ஊடகங்கள் வெளியிடுகின்றன.

புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் ஊடகங்கள் அவற்றினை அப்படியே அத் தகவல்களை வெளியிட்டு தங்கள் இந்திய விசுவாசத்தினைக் காட்டிக் கொண்டுள்ளார்கள். தமிழ்நாட்டில் வாழும் இந்தியர்களிற்கு ஓர் இந்தியனாக அச் செய்திகள் முக்கியமானவையாகப் படுகின்றது. அதனை அவர்கள் தங்கள் செய்தித் தளங்களில் பதிவிடுகிறார்கள்.

ஆனால் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் மக்களின் ஊடகங்களின் முக்கிய நுகர்வோராகக் காணப்படுபவர்கள் ஈழத் தமிழ் மக்கள். குறைந்தது அவரவர் வாழும் நாடுகளில் நடைபெறும் செய்திகளை யாவது, அவை எவ்வாறு இந்த மக்களின் வாழ்வியலில் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பது போன்ற தகவல் களையாவது வெளியிட மறுக்கிறார்கள்.

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் அல்லது குஜராத் மாநிலத்தில் ஒருவர் தனிப்பட்ட விடயம் காரணமாக நஞ்சினை உண்டு மரணித்தார் என்றால் அதனை இந்திய ஊடகத்தின் துணையுடன் வெளிக் கொண்டுவரும் இவ்வூடகங்கள் தாங்கள் தாங்கள் இருக்கும் நாடுகளில் நடைபெறும் விடயங்களைச் சிறிதாவது வெளிக்கொணரத் தயங்குகின்றனர்.

புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் மக்களிடம் இருக்கும் ஊடகங்கள் ஊடகம் என்றால் என்ன என்பதனை மறந்து செயற்படுகின்றார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது. செய்தியாளர்கள் இல்லாது தங்கள் தளங்களினை நடாத்துகின்றார்களெனில் குறைந்தது அவர்கள் நாடுகளில் உள்ள பிற ஊடகங்களினையும் கவனத்தில் எடுத்துச் செயற்படுவது சிறந்தது.

இங்கு இவ்வாறு ஓர் விமர்சனம் வைப்பதன் மூலம் இந்திய எதிர்ப்பினைப் பதிவுசெய்வதென்பது நோக்கமல்ல. இதனை வாசிப்பவர்கள் அவ்வாறு இதனை எடுத்துக் கொள்வது அவரவரினைப் பொறுப்பு. சமூகத்தில் ஊடகத்திற்கு இருக்கும் பொறுப்பினைத் ஊடகங்கள் உணர்ந்து கொள்ளாதுவிடின் அதனைச் சுட்டிக்காட்டவேண்டியது அச் சமூகத்தில் இருப்பவர்களின் பொறுப்பு. அவ்வகையிலேயே இவ்விமர்சனத்தினை இங்கு வைக்கின்றேன். (இங்கு பெயர் குறிப்பிட்டு பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணையத்தளங்களைக் குறிப்பிட விரும்பவில்லை)

குறிப்குறிப்பாக இணையத் தளங்களிற்கும் அதனை நடாத்துபவர்களிற்கும்!, உங்கள் இணையத்தளமானது செய்தியாளர்களைக் கொண்டிருக்கவில்லையானால் அல்லது நீங்கள் வேறு இணையத்தளங்களை மட்டுமே உங்கள் இணையத் தளச் செய்திகளிற்கு நம்பியிருப்பவர்களாக இருப்பின் தயவுசெய்து உங்கள் இணையத் தளங்களைச் செய்தியூடகமாக விளிக்க வேண்டாம் எனத் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன். அவற்றினைத் தனியார் ஒருவரின் தளம் என்றே கூறவும்.

*- சுடர்*

முடி வளர்ந்திச்சின்னா வெட்டிக்கலாம்.
நகம் வளர்ந்திச்சின்னா கூட வெட்டிக்கலாம்.
ஆனால்,
அறிவு வளர்ந்திச்சின்னா?.....
கவலைப்படாதீங்க! உங்க நல்ல மனசுக்கு
அப்படியெல்லாம் நடக்காது. தைரியமா இருங்க!!!

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்..........

**August 09**
SUNDAY
@ **11:00**

**தியாகி முருகதாசன் நினைவெழுச்சி நாள்**
*ஈழமக்களின் அவலத்தை தாங்க முடியாமல் தன்னுடலை தீக்கிரையாக்கிய தியாகி முருகதாஸின் நினைவெழுச்சி நாள்.*
*இடம்:* 326 Preston Road,
Harrow, HA3,
Middlesex.
*நேரம்: ஞாயிறு காலை 11:00 மணியிலிருந்து*

---

**August 09**
SUNDAY
@ **10:00**

**Ealing அம்மன் ஆலய தேர்த் திருவிழா**
*ஈலிங் அருள்மிகு கனகதுர்க்கை அம்மன் வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா.*
*இடம்:* 5 Chappel Road, West Ealing
London W13 9AE
*நேரம்: ஞாயிறு காலை 10:00 மணியிலிருந்து*
*தொடர்புகளுக்கு:* 020 8810 0835

---

**August 15**
SATURDAY
@ **17:00**

**"ஏழாவது ஊழி" புத்தக வெளியீட்டு விழா**
*பொ. ஐங்கரநேசன் எழுதிய "ஏழாவது ஊளி" புத்தக வெளியீட்டுவிழா.*
*இடம்:* Ascension Church Hall,
The Avenue, Wembley,
Middlesex HA9 9QL
*நேரம்: மாலை 5:00 மணியிலிருந்து*
*தொடர்புகளுக்கு: தமிழ்ப்புலம் 07772033874*

---



"வாழ்க்கையில் வெற்றி பெற மூன்று வழிகள் உள்ளன. பிறரைக்காட்டிலும் அதிகமாக அறிந்து கொள்ள முயலுங்கள், பிறரைக்காட்டிலும் அதிகமாக உழைக்கக் கற்றுக்கொள்ளுங்கள், பிறரைக் காட்டிலும் குறைவாக பிறரிடமிருந்து பெற முயலுங்கள். "

- -வில்லியம் ஷேக்ஸ்பியர்


FREE Entry!!!

CELEBRATING DIVERSITY

Festival/Mela in Redbridge

**Organised by The League of British Muslims UK**

Food, music, dance, amusements ........

There will be workshops throughout the day focussing on various themes, including Crime Prevention and other local issues. These will give opportunities for you, the local residents, to raise points and ask questions that concern you to the Police and Local Authority officials.

Plus LIVE PERFORMANCE by Nooran Lals, famous international singer!!

VENUE: Loxford Park, Loxford Lane, Ilford
DATE: Sunday, 16th August 2009
TIME: 11 am to 6 pm

For further information and for details of how you can participate in and contribute to this event, for example setting up your own stall, please call Mr Chaudhry on 0208 514 0706, Mr Purewall on 0208 989 9546, Satnam Singh (Event Manager) 07961 462999 or Emile Nkumu on 07956 115572.

And Other Local Businesses:
Quality Food | Rani Fashions | Claire Fashions | GMS | Music Hut | DJ Palli | Planet Services UK Ltd | Barking Park Hotel | South Ilford Business Association

SUPPORTED BY:
Redbridge Faith Forum
RCVS RREC RAMFEL
Panjabi Centre French
Speaking African Women's Association

London Borough of Redbridge

NUSOUND 92FM
WWW.NUSOUNDRADIO.COM

TESCO